# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101976

1. District : Madurai மாவட்டம் PS: V & AC காவல்நிலையம் Year: 2024 ஆண்டு FIR No.: 05/24 மு.த.அ. எண் Date: 30.05.24 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018 and CrPC Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 102 CrPC
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.05.2024 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 14:00 hrs Time to : நேரம் வரை 19:30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.05.24 Time : நேரம் 21:45 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.05.24 Time : நேரம் 22:00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complainant

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் O/o the Kalungalakudi Sub-Registrar office, 40 kms, North East.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o the Kalungalakudi Sub-Registrar office Madurai North Sub-Registry, Madurai
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. Singaravelan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Malayandi
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் District Inspection Cell Inspector Madurai (g) Address : முகவரி District Inspection cell office, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Arul Murugan. P. Sub-Registrar Kalungalakudi, Madurai North

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- Nil -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached Seperate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Balamurugan Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V.K.A.C., Madurai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 30-5-24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature)

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 30/05/24 23.00 hrs.

Name: பெயர் P.M. RAJESH PRABHU
Rank: நிலை Inspector No. எண் of Police
V.K.A.C., Madurai

**Honoured Sir,**

**Submitted,**

இன்று 30.05.2024-ம் தேதி இரவு 21.45 மணிக்கு, காவல் ஆய்வாளர் P.M. ரமேஷ்பிரபு ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திரு.M.சிங்காரவேலன் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை வடக்கு பதிவு மாவட்டம் கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 30.05.2024, திடீர் இணை ஆய்வின் போது கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,80,700/-, கைப்பற்றப்பட்ட 7 ஆவணங்கள் மற்றும் கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலில் இருந்த நான்கு அலுவலர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் M. சிங்காரவேலன், ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 17774 / 2023 / I1, நாள் : 30.05.2024 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - பதிவுத்துறை - மதுரை வடக்கு பதிவு மாவட்டம் கருங்காலக்குடி சார்பதிவாளர் திரு. அருள்முருகன் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொழுது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இன்று 30.05.2024-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,80,700/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. இன்று 30.05.2024-ம் தேதியன்று, மதுரை மாவட்டம், கருங்காலக்குடி கிராமம், கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் சார்பதிவாளர் திரு. அருள்முருகன் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் போது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திரு. ரமேஷ்பிரபு அவர்கள் தெரிவித்தார்கள். பின்பு, நான் அழைத்ததின் பேரில், காவல் ஆய்வாளர்கள் திரு.ரமேஷ்பிரபு, திரு. குமரகுரு மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் இணைந்து இன்று (30.05.2024) காலை 11.45 மணிக்கு புறப்பட்டு, சுமார் 12.45 மணியளவில், கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக காம்பவுண்டு சுவருக்கு வெளியிலும், மேற்படி அலுவலக காம்பவுண்டு சுவருக்கு உள்பகுதியில் சார்பதிவாளர் அலுவலக

வளாகத்திற்குள்ளேயும் ஆங்காங்கே தனித்தனியாக பொதுமக்கள் போல நின்று இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டதில் மேற்குறிப்பிட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்ய வந்தவர்கள் அரசு கட்டணம் நீங்கலாக சார்-பதிவாளராக பணியாற்றும் திரு. அருள்முருகன் என்பவர் பத்திர எழுத்தர்கள் மூலமாக கூடுதல் தொகை வசூல் செய்து வைத்துள்ளதாக இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றதின் பேரில், இன்று மதியம் 14.00 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி மதுரை கருங்காலக்குடி சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே வடக்கு பார்த்து அமைந்துள்ள வாசலின் வழியாக நாங்கள் நுழைந்த போது, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருகைபுரியும் பொதுமக்கள் அமர்ந்திருக்கக்கூடிய மர பென்ஞ்சில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தவர்கள் வடக்கு திசை நோக்கியவாறு அமர்ந்திருந்தனர். அவர்களை தாண்டி மேற்கு பக்கமாக சென்று தெற்கு பக்கம் திரும்பி மேற்படி அலுவலகத்தின் கண்ணாடி நுழைவுவாயிலை கடந்து உள்ளே சென்ற போது, மேற்படி அலுவலகத்தின் தெற்கு பக்கம் கடைசியில் வடக்கு திசை நோக்கி போடப்பட்டிருந்த சார்பதிவாளர் இருக்கையில் சார்பதிவாளர் திரு. அருள்முருகன் பணி செய்து கொண்டிருந்தார். மேலும், மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில், சார்பதிவாளர் இருக்கைக்கு முன்பு கிழக்கு பக்க சுவரின் பக்கத்தில் கணிப்பொறி முன்பாக அமர்ந்து Data Entry Operator திருமதி. ரேவதி என்பவர் தெற்கு திசை நோக்கியும், மேற்கு பக்க சுவரின் பக்கத்தில் கணிப்பொறி முன்பாக அமர்ந்து உதவியாளர் திருமதி. லெட்சுமி என்பவர் வடக்கு திசை நோக்கியும் பணி செய்து கொண்டிருந்தார்கள். மேலும், அலுவலகத்தின் கண்ணாடி நுழைவு வாயிலை ஒட்டி மேற்கு பக்கத்தில் தெற்கு திசை நோக்கி கணிப்பொறி மற்றும் ஐ.பி. கேமராவுடன் கூடிய மேஜை முன்புள்ள இருக்கையில் ஆள் இல்லாமல் காலியாக இருந்தது. மேற்படி பணி செய்து கொண்டிருந்த அலுவலர்களிடம் எங்களை அறிமுகம் செய்த பின்னர் கருங்காலக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள இருப்பது பற்றி விவரம் தெரிவிக்கப்பட்டது. திரு. அருள்முருகனிடம் அவரது அலுவலகத்தை முழுமையாக சோதனையிடப்பட உள்ளது என தகவல் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அவர் சரியென்று ஒத்துக்கொண்டார். ஆனால், அவர் தனது வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அதில் ஸ்டீல் பிளேட் வைத்திருப்பதால் தன்னால் மேலே படிக்கட்டுகளில் ஏறி வர இயலாது என்றும் எனவே மேற்படி அலுவலகத்தில் முதல் தளத்தில் பணியில் உள்ள IP Camera Operator திருமதி. பவுன் மூலமாக மேல் தளத்தை சோதனையிட வேண்டும் அனுமதி கோரினார். அவரது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது மதுரை மாவட்டம், மேலூர் தாலுகா, கம்பூர் ரோட்டில் தெற்கு பக்கத்தில், கள்ளழகர் மகாலை ஒட்டி திரும்பி சுமார் 100 அடி உள்ளே சென்று, கிழக்கு பக்கம் திரும்பியவுடன் வடக்கு திசையை நோக்கி தரைத்தளம், முதல் தளம் மற்றும் மொட்டை மாடியுடன் அமைந்த கட்டடமாக இருந்தது.

அதில் தரைதளத்தில் கருங்காலக்குடி சார் பதிவாளர் அலுவலக மெயின் ஹாலில் அலுவலர்கள் பணி செய்து கொண்டிருந்தார்கள். முதல் தளத்தில் பழைய ஆவணங்கள் வைப்பதற்காக ஒரு ஹாலும், மூன்று அறைகளுமாக இருந்தது. மேலும், சோதனையின் போது சார்பதிவாளர் திரு. அருள் முருகன் அவர்களையும், அவரது அலுவலக மேஜை மற்றும் உடைமைகளையும் சோதனையிட அவரிடம் பணம் ரூ.600/- இருந்தது. அதுபற்றி விபரம் கேட்க, தான் இன்று செலவுக்கு கொண்டு வந்திருந்த பணம் என்றும், அந்த பணம் குறித்து அலுவலக தனிநபர் ரொக்க பதிவேட்டில் குறிப்பிட்டு கையொப்பம் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அதனை சரிபார்க்க சரியாக இருந்தது. எனவே அவரது சொந்த பணம் திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும், தகவலின் பேரில் மேற்படி அலுவலகத்திற்கு வந்து ஆஜரான மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி காவல் நிலைய தலைமைக்காவலர் திருமதி. கல்பனா அவர்களின் உதவியுடன், மேற்படி அலுவலக சார்பதிவாளர் இருக்கைக்கு முன்பு கிழக்கு பக்க சுவரின் பக்கத்தில் கணிப்பொறி முன்பாக அமர்ந்து பணி செய்த Data Entry Operator திருமதி. ரேவதி அவர்களையும், அவரது அலுவலக மேஜை மற்றும் அவரது கைப்பை (Hand Bag) சோதனையிட அவரிடம் பணம் ரூ.180/- இருந்தது. அதுபற்றி விபரம் கேட்க, தான் இன்று செலவுக்கு கொண்டு வந்திருந்த தனது சொந்த பணம் என்றும், அந்த பணம் குறித்து தங்களுக்கான அலுவலக தனிநபர் இருப்பு பதிவேட்டில் எழுதவில்லை என தெரிவித்தார். எனவே, அவரது சொந்த பணம் திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. தொடர்ந்து, தலைமைக்காவலர் திருமதி. கல்பனா அவர்களின் உதவியுடன், மேற்படி அலுவலக சார்பதிவாளர் இருக்கைக்கு முன்பு மேற்கு பக்க சுவரின் பக்கத்தில் கணிப்பொறி முன்பாக அமர்ந்து பணி செய்த உதவியாளர் திருமதி. லெட்சுமி அவர்களையும், அவரது அலுவலக மேஜை மற்றும் அவரது கைப்பையை சோதனையிட அவரிடம் பணம் ரூ.200/- இருந்தது. அதுபற்றி விபரம் கேட்க, தான் இன்று செலவுக்கு கொண்டு வந்திருந்த பணம் என்றும், அந்த பணம் குறித்து அலுவலக தனிநபர் ரொக்க பதிவேட்டில் எழுதி கையொப்பம் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அதனை சரிபார்க்க சரியாக இருந்தது. எனவே அவரது சொந்த பணம் திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. மேற்படி சார்பதிவாளர் அலுவலக மெயின் ஹாலில் கிழக்கு பக்க சுவற்றில் Datat Entry Operator இருக்கைக்கு மேலே ஒரு சி.சி.டி.வி. கேமரா உள்ளது. அந்த சி.சி.டி.வி. கேமராவில் காட்சிகள் பதிவாகி கொண்டிருந்தது. மேற்படி ஹாலின் கண்ணாடி நுழைவு வாயிலின் வடக்கு பக்கத்தில் கண்ணாடி கதவுகளுக்கு மேலே சுவரில் ஒரு சி.சி.டி.வி கேமரா உள்ளது. அதில் மேற்படி அலுவலகத்தின் வராண்டாவில் நடக்கு நிகழ்வுகளின் காட்சிகள் பதிவாகி கொண்டிருந்தது. மேற்படி, சார்பதிவாளர் அலுவலக மெயின் ஹாலின் மேற்கு பக்கம் வழியாக முதல் தளத்திற்கு செல்லும் பட்டிக்கட்டுகள் உள்ளது. அதற்கு எதிரே தெற்கு பக்கத்தில் வடக்கு பார்த்தவாறு பெண் மற்றும் ஆண் கழிப்பறைகள் தனித்தனியாக

உள்ளது. அந்த பகுதி முழுமையாக சோதனையிடப்பட்டது. மேற்படி, வடக்கு திசை நோக்கி செல்லும் படிக்கட்டுகள் வழியாக சென்று தெற்கு திசையை நோக்கி திரும்பி படிக்கட்டுகள் வழியாக செல்ல முதல் தளத்தில் தென் வடலாக சுமார் 20 X 12 அளவிலான ஹால் ஒன்று இருந்தது. அங்கு அலுவலில் இருந்த மேற்படி அலுவலக IP Camera Operator திருமதி. பவுன் அவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்தி தகவல் தெரிவித்து, மேற்படி சோதனைக்கு உதவியாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். அவரும் அதற்கு ஒத்துக்கொண்டார். அந்த ஹாலில் முழுமையாக சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த ஹாலின் தெற்கு பக்கம் வடக்குப்பார்த்தவாறு மரக்கதவு கொண்ட கிழ மேலான பதிவு வைப்பறை எண்.1 முழுமையாக சோதனையிடப்பட்டது. மேலும், பதிவு வைப்பபறை எண்.1-ன் கிழக்கு பக்கம், மேற்கு பார்த்தவாறு பதிவு வைப்பறை எண்.2 மற்றும் அதனையடுத்து பதிவு வைப்பறை எண்.3 தனித்தனியாக அமைந்துள்ளது. மேற்படி பதிவு வைப்பறை எண்.2-ம் முழுமையாக சோதனையிடப்பட்டது. அதனையடுத்து வடக்கு பக்கம் பதிவு வைப்பறை எண்.3 ஆனது சுமார் 10 X 10 அடி அளவில் அமைந்துள்ளது. அங்கு தெற்கு பக்க சுவரை ஒட்டி 5 அடுக்குகள் கொண்ட ஒரு ஸ்டீல் ரேக்-கும், அதனையடுத்து கிழக்கு பக்க சுவரை ஒட்டி அதே போல் 5 அடுக்குகள் கொண்ட இரண்டு ஸ்டீல் ரேக்குகள் உள்ளது. அதில் ஒரு ஸ்டீல் ரேக்-ஆனது தென்கிழக்கு மூலையில் உள்ளது. அதில் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதில் இருந்த இரண்டாவது தடுப்பில் ஆவணங்களுக்கு மேல் ஒரு பிளாஸ்டிக் கவரின் உள்ளே கத்தைகளாக பணம் இருந்தது. அவற்றை நான் எடுத்து எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் ரூ.1,75,000/- (ரூ.500/- X 310 = ரூ.1,55,000/-, ரூ.200/- X 55 = ரூ.11,000/-, ரூ.100/- X 90 = ரூ.9,000/-) இருந்தது. அதனையடுத்து வடகிழக்கில் ஒரு ஸ்டீல் ரேக்கும், அதற்கு எதிரே மேற்கு பக்க சுவரை ஒட்டி ஒரு ரேக்கும் உள்ளது. அவற்றில் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்த பதிவு வைப்பறை எண்.3-ன் கதவை ஒட்டி தெற்கு பக்க சுவரின் மூலையில் 500 ரூபாய் நோட்டுகள் மடித்து போடப்பட்டிருந்தது. அதனை நான் எடுத்து எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் ரூ.3,000/- (ரூ.500/- X 6 = ரூ.3,000/-) இருந்தது. அவ்வறை முழுமையாக சோதனையிடப்பட்டது. மேற்படி அறையில் காணப்பட்ட பணம் குறித்து திருமதி. பவுன் அவர்களிடம் விபரம் கேட்ட போது, தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்து விட்டார். மேற்படி முதல் தளத்திலிருந்து மொட்டை மாடிக்கு செல்லும் படிக்கட்டுகள் மேற்படி ஹாலின் மேற்கு பக்கத்தில் உள்ளது. அது வடக்கு பக்கமாக சென்று, தெற்கு திசையில் திரும்பி மேலும் படிக்கட்டுகளில் ஏறி சென்றால் மொட்டை மாடியை அடைகிறது. மேற்படி மொட்டை மாடி வாசலுக்கு முன்பாக மூலையில் இருந்த ஒரு அட்டைபெட்டிக்கு அருகில் ரூபாய் நோட்டுகள் மடித்து போடப்பட்டிருந்தது. அதனை நான் எடுத்து எண்ணிப்பார்க்க அதில் மொத்தம்

ரூ.2,700/- (ரூ.500/- X 4 = ரூ.2,000/-, ரூ.200/- X 1 = ரூ.200/-, ரூ.100/- X 5 = ரூ.500/-) இருந்தது. மேலும், மொட்டை மாடி பகுதி முழுமையாக சோதனையிடப் பட்டது. அங்கு கருப்பு மற்றும் வெள்ளை நிற சின்டெக்ஸ் டேங்க்குகள் காணப்பட்டது. மேற்படி பணம் ரூ.2,700/- சம்பந்தமாகவும் தனக்கு எதுவும் தெரியாது என திருமதி. பவுன் தெரிவித்து விட்டார். பிறகு, தலைமைக்காவலர் திருமதி. கல்பனா அவர்களின் உதவியுடன், மேற்படி அலுவலக சார்பதிவாளர் அலுவலக கண்ணாடி நுழைவுவாயிலில் நுழைந்தவுடன் மேற்கு பக்க சுவரின் பக்கத்தில் தெற்கு திசை நோக்கி உள்ள கணிப்பொறி மற்றும் ஐ.பி. கேமரா பொருத்தப்பட்ட மேஜை முன்புள்ள இருக்கையில் அமர்ந்து பணி செய்யக்கூடிய IP Camera Operator திருமதி. பவுன் அவர்களையும், அவரது அலுவலக மேஜை மற்றும் உடைமைகளையும் சோதனையிட அவரிடம் பணம் ரூ.730/- இருந்தது. அதுபற்றி விபரம் கேட்க, தான் இன்று மருந்து வாங்கவும், கைச்செலவுக்கும் கொண்டு வந்திருந்த பணம் என்றும், அந்த பணம் குறித்து தங்களுக்கான அலுவலக தனிநபர் இருப்பு பதிவேட்டில் எழுதவில்லை என தெரிவித்தார். எனவே அவரது சொந்த பணம் திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சம்பந்தமாக மதுரை வடக்கு மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) திருமதி. விஜயசாந்தி அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படதொடர்ந்து, சோதனையின் போது, சார்பதிவாளர் அலுவலக முதல் தளத்தில் உள்ள பதிவு வைப்பறை எண்.3-ல் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,78,000/- மற்றும் மொட்டை மாடியில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,700/- ஆக மொத்தம் ரூ.1,80,700/- குறித்து கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக சார்பதிவாளர் திரு. அருள்முருகன் அவர்களிடம் விசாரித்த போது, அந்த பணம் குறித்து தனக்கு தகவல் ஏதும் தெரியாது என தெரிவித்தார். மேலும், சார்பதிவாள் திரு. அருள் முருகன் அவர்களிடம் அவரது வீட்டின் முகவரி குறித்து கேட்ட போது, அவர் தற்போது மேலூரில் நீதிமன்றத்திற்கு எதிரில் மூவேந்தர் நகர் 2வது தெருவில் குடியிருந்து வருவதாகவும், அங்கிருந்து தான் தினமும் தனது வாகனம் TN 49 BE 5000 Toyota Etios பதிவெண் கொண்ட வாகனத்தில் சென்று வருவதாகவும், தனது கார் அலுவலகத்திற்கு வெளியில் நிறுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார். அதன்பேரில், திரு. அருள் முருகனை அழைத்து கொண்டு, நான் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் ஆகியோருடன் சென்று அந்த வாகனத்தை முழுமையாக சோதனையிட்டதில், அந்த வாகனத்தின் டேஸ் போர்டில் ரூ.4,100/- (ரூ.200/- X 20 = ரூ.4,000/-, ரூ.20/- X 5 = ரூ.100/- ) இருந்தது. அப்பணம் தான் தனது வாகனத்திற்கு டீசல் போட வைத்திருப்பதாக தெரிவித்ததன் பேரில் அவரிடமே அப்பணம் திரும்ப கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, மேல் விசாரணைக்காக Data Entry Operator திருமதி. ரேவதி அவர்கள் கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொடுத்த (1) Year 2024 Month May Account A (பத்து ஆவணங்கள்

பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் - அதற்கான பணங்கள் அனைத்தும் இ-பேமெண்ட் செய்யப்பட்டுள்ளது), (2) Sub Division Account – (4 ஆவணங்களின் உட்பிரிவு கட்டண விபரம் - அதற்கான பணங்கள் அனைத்தும் இ-பேமெண்ட் செய்யப்பட்டுள்ளது), (3) Section 41 Account (குறைவு முத்திரை தீர்வை கட்டணம் - இ-பேமெண்ட் செய்யப்பட்டுள்ளது), (4) IP Camera / CD Account (பத்து ஆவணங்களுக்குரிய குறுந்தகடு கட்டணம் - இ-பேமெண்ட் செய்யப்பட்டுள்ளது), (5) Account DW (ஆவண எழுத்தர்களின் நலநிதிக்கான கட்டணம் - இ-பேமெண்ட் செய்யப்பட்டுள்ளது), (6) Account D (நகல் மற்றும் வில்லங்கம் பதிவு ஏதும் இல்லை), (7) Birth / Death Cash Account ( பதிவு இல்லை), (8) Tamil Nadu Registration Act 2009 (பதிவு ஏதும் இல்லை), (9) Hindu Marriage Accounts (பதிவு ஏதும் இல்லை) (Date from 30-May-2024 To : 30-May-2024) - பக்கங்கள் 1 முதல் 9 வரையிலான ஆவணங்களையும், மேல் விசாரணைக்காக கருங்காலங்குடி சார்பதிவக சார்பதிவாளர் திரு. அருள்முருகன் அவர்கள்ஆஜர் செய்த (1) கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக வருகைபதிவேடு 2024 (பக்கம் 1 முதல் 11 வரை எழுதப்பட்டுள்ளது), (2) கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக ரொக்க பதிவேடு 2024 (பக்கம் 1 முதல் 23 வரை எழுதப்பட்டுள்ளது), (3) கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக தணிக்கை வருகைபதிவேடு 2024 (பக்கம் 1 முதல் 18 வரை எழுதப்பட்டுள்ளது), (4) கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக தாமத வருகைபதிவேடு 2024 (பக்கம் 1 முதல் 11 வரை எழுதப்பட்டுள்ளது), (5) கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக இயக்க பதிவேடு 2024 (பக்கம் 1 முதல் 2 வரை எழுதப்பட்டுள்ளது), (6) கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலக தனி நபர் இருப்பு பதிவேடு 2024 (பக்கம் 1 முதல் 22 வரை எழுதப்பட்டுள்ளது) ஆகிய ஆவணங்கள் மற்றும் சார்பதிவாளர் திரு. அருள் முருகன், உதவியாளர் திருமதி. லெட்சுமி, Data Entry Operator திருமதி. ரேவதி மற்றும் IP Camera Operator திருமதி. பவுன் ஆகியோரின் எழுத்து மூலமான வாக்குமூலங்கள் மற்றும் கருங்காலக்குடி சார்பவதிகத்தில் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் ரூ.1,80,700/- ஆகியவற்றை இணைத்து திரு. அருள் முருகன், சார்பதிவாளர், கருங்காலக்குடி சார்பதிவகம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், மதுரை என்பவர் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம் /- XXXXX 30.5.24 (M. சிங்காரவேலன்) ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 30.05.2024, 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,80,700/-, 3) கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 7 ஆவணங்கள், 4) நான்கு அலுவலர்களின் வாக்குமூலங்கள்

Sir, Received this report today (30.05.2024) at 21.45 hrs along with Joint Surprise Check Proceedings, 30.05.2024, Cash Rs. 1,80,700/-, Four statements and Seized 7 documents. After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime No.05/2024 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr. P.C on 30.05.2024 at 22.00 hrs. Sd/- XXXXX (P.M. Ramesh Prabhu), Inspector of Police, V&AC, MDU 30.05.2024.

The original FIR along with report of Tr. M. Singaravelan, Joint Surprise Check Proceedings Dated : 30.05.2024 and 4 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

(P.M. RAMESH PRABHU)
Inspector of Police
V&AC
Mdu.
30/05/24